**17.02.2021 அ.வ.எண். 199/2013 வா.சா.1 தனபாக்கியம்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது பிரமான வாக்குமூலத்தில் 21.10.2013 அன்று எனது மாமியார் வெள்ளிச்சியம்மாள் என்பவர் தாவாசொத்து சம்மந்தமாக எனது பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவே குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் உயிருடன் உள்ளார். வெள்ளச்சியம்மாள் தற்போது மருதாடு கிராமத்தில் உள்ள அவரது மகள் வீட்டில் வசித்துவருகிறார். அவர் கணவர் இறந்துபோனதால் அவர் முதியோர் ஓய்வூதியம் பெற்றுவருகிறார். அவ்வாறு எனது மாமியார் மருதாடு கிராமத்தில் 30 ஆண்டுகாலமாக அங்கு வசித்துவருகிறார். அவ்வப்போது தென்னாங்கூர் கிராமத்திற்கு வந்துசெல்வார். வெள்ளச்சியம்மாள் என்பவருக்கு 30 ஆண்டுகாலமாக தென்னாங்கூர் கிராம முகவரியில் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்ற ஆவணங்கள் ஏதும் கிடையாது என்று சொன்னால் சரிதான். வெள்ளச்சியம்மாள் என்பவருக்கு மருதாடு முகவரியில்தான் முதியோர் உதவித்தொகை அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை இருந்துவருகிறது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக வெள்ளச்சியம்மாள் பெயரில் பட்டா ஏதும் கிடையாது என்று சொன்னால் சரிதான். எனது பெயரிலும் தாவா சொத்து சம்மந்தமாக பட்டா ஏதும் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் வெள்ளச்சியம்மாள் என்பவருக்கு வீடு இருந்துவந்தது. அது பழுதடைந்து இடிந்துபோய்விட்டது. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் வெள்ளச்சியம்மாள் என்பவர் தாவா சொத்தின் அனுபவத்தை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து எனது வசம் ஒப்படைத்து விட்டதாக குறிப்பு ஏதும் உள்ளதா என்றால் அதுபற்றி பார்த்தால்தான் தெரியும். சின்னதுரை எனது கணவர். ராஜா, சுந்தர் ஆகியோர் எனது மகன்கள் ஆவார். இவ்வழக்கில் நானும், வெள்ளச்சியம்மாளும் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வெள்ளச்சியம்மாள் என்பவர் என்னுடன் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்ததற்கு குறிப்பாக எந்த காரணமும் கிடையாது. சாட்சி தற்போது வழக்கை தான் மட்டுமே தாக்கல் செய்ததாகவும், வழக்கை தாக்கல் செய்ய சென்றபோது தனது மாமியார் வெள்ளச்சியம்மாள் தன்னுடன் வந்ததாகவும் கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தை நான் அனுபவித்து வருவதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை நாங்கள் அனுபவித்துவந்தோம். 15 ஆண்டுகள் நாங்கள் வெளியூரில் இருந்தோம். அதன்பின்பு தாவா சொத்தை நாங்கள் அனுபவிக்ககூடாது என பிரதிவாதி தடைசெய்ததால் நாங்கள் அனுபவிக்க முடியாமல் போனது. அதனால்தான் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்தை நாங்கள் அனுபவித்ததாக குறிப்பிடவில்லை. எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் எனக்கு வா.சா.ஆ3ல் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை மட்டுமே எழுதிவைத்தார். வா.சா.ஆ3ல் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் தானசெட்டில்மெண்ட் அல்ல என்றும் அது உயில்சாசனம் என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாததால் அதைபற்றி எனக்கு தெரியாது. எனது மாமியார் வா.சா.ஆ.3ல் உள்ள ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணத்தையும் எழுதிகொடுக்கவில்லை. வா.சா.ஆ3ல் உள்ள ஆவணம் உயில்சாசனம்

என்றும், அதை எனது மாமியார் இறப்பிற்கு பிறகும் நான் அதை அடைந்து கொள்ளலாம் என எழுதப்பட்டுள்ளதாக நான்படிக்ககேட்டேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ3ல் உள்ள ஆவணம் ஏற்படுவதற்கு ஒருவார காலத்திற்கு முன்பிலிருந்து எனது மாமியாருக்கு ஞாபகமறதி இருந்துவந்தது. எனது மாமியாரை சாட்சியாக விசாரித்தால் அவர் நல்ல மனநிலையில் உள்ளதை அறியமுடியும் என்றால் சரிதான். எனது மாமியார் தற்போது எந்த மனநிலையிலும், உடல்நிலையிலும் இருந்துவருகிறார் என்று எனக்கு தெரியாது. அவர் மருதாடு கிராமத்தில் வசித்துவருகிறார். தாவா சொத்து சம்மந்தமாக எனது பெயரிலும், எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் பெயரிலோ பட்டா இல்லை என்ற விவரங்கள் எனக்கு தெரியும். தாவாசொத்தை எனது மாமியார் சேதுராம அய்யர் என்பவரிடம் அடமானம் வைத்ததாக சேதுராம அய்யர் சொன்னார். அதைகுறித்து நான் விசாரித்தபோது எனது மாமியார் தனக்கு தெரியவில்லை என்றும், அவர் அடமானம் வைத்தாரா அல்லது அவரது கணவர் அடமானம் வைத்தாரா என்பது குறித்து அவருக்கு தெரியாது என கூறுகிறார். பதிவு அலுவலகத்திலிருந்து அடமான பத்திரத்தின் சான்றிட்ட நகலை நான்தான் பெற்று தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து சம்மந்தமான 1951ம் வருடத்திலிருந்து 2012ம் காலவரையிலான வில்லங்க சான்றிதழை நான் பெற்றுபார்த்தேன். அதை என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். 25.04.1977 அன்று எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் சகாதேவன் என்பவருக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தது சம்மந்தமாக வில்லங்க சான்றிதழில் குறிப்புகள் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பின்பு 29.08.1986 அன்று சகாதேவன் என்பவர் தாவா சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்தது சம்மந்தமாகவும் வில்லங்க சான்றிதழில் குறிப்புகள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு குறிப்புகள் உள்ளதாக யாரும் என்னிடம் கூறவில்லை. நான் பெற்ற வில்லங்கசான்றிதழை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். சின்னசாமி கவுண்டர் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் உள்ள சொத்து விவரத்தை பார்த்து அதை குறிப்பிட்டு வில்லங்க சான்றிதழ் பெற்றேன். நான் எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் உயில் சாசனத்தை தானசெட்டில்மெண்ட் பத்திரம் என பொய்யாக குறிப்பிட்டு தாவா சொத்தின் மீது தவறாக உரிமைகோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் எனக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் தான் எழுதிவைத்தார். வா.சா.ஆ3ல் எனது மாமியார் இறப்பிற்கு பிறகு அந்த ஆவணம் ஆச்சாரத்திற்கு வரும் என்றும், அவர் ஆயுட்காலத்தில் அதைமாற்றி எழுத அவருக்கு உரிமை உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் படிக்ககேட்டேன் என்றால் சரிதான். எனது மாமியார் உயிருடன் இருந்துவருவதால் வா.சா.ஆ3 உள்ள ஆவணம் உயில்சாசனம் ஆனபடியால் அது ஆச்சாரத்திற்கு வரவில்லை என்றும், அதனடிப்படையில்நான் உரிமை ஏதும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் 1977ம் வருடமே சகாதேவன் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றும், அவ்வாறு கிரையம் செய்துகொடுத்ததால் தாவா சொத்து சம்மந்தமாக அவர் உயில் ஆவணமோ, வேறு எந்த ஆவணமோ அவருக்கு எழுதிவைக்க உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வேறு ஆவணங்கள் ஏற்படுத்தினால் உண்மைநிலை தெரியவரும் என்பதால் தாவா சொத்து சம்மந்தமாக உயில்சாசனம் எழுதப்பட்டு அது தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பாஞ்சாலை கவுண்டர் மகன் ராஜா என்பவர் தாவா சொத்தின் பின்புறம்

அமைந்துள்ள நிலத்தை அளவீடு செய்தபோது நாங்கள் அங்கு இருந்தோம். கோபால் நாயக்கர் என்பவர் சுமார் 6 செண்ட் நிலம் விற்பனை செய்யாமல் இருந்துவந்ததாக கூறினார். பின்பு கோபால் நாயக்கர் என்பவருக்கு எனது மாமனார் கிரையம் செய்துகொடுத்தாகவும், சாகதேவன் என்பவருக்கு எனது மாமியார் கிரையம் செய்துகொடுத்ததாகவும் கூறினார்கள். அதைபற்றி நான் எனது மாமியாரிடம் கேட்டபோது அவ்வாறு கிரையபத்திரம் ஏதும் எழுதவில்லை என்று கூறினார். தாவா சொத்தின் அருகில் உள்ள தட்டோடு வீட்டை எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் என்பவரிடமிருந்து ருக்மணியம்மாளின் மாமனார் பரசுராம கவுண்டர் என்பவர் கிரையம் பெற்றார். நாங்கள் செங்கல் சூளை வேலைக்கு மதுரவாயல் சென்று அங்கு வசித்துவந்த அதன்பின்பு நாங்கள் ஊருக்கு வந்தபோது தாவா சொத்தை அனுபவிக்க நாங்கள் சென்றபோது சகாதேவன் என்பவரிடமிருந்து ருக்மணியம்மாள் கிரையம் பெற்று விட்டார் என்று கூறி எங்களை அனுபவிக்க முடியாமல் தடுத்து வருகிறார்கள். எனது மாமியார் சேதுராம அய்யரிடம் அடமானம் வைத்தது சம்மந்தமான அடமான தொகையை நாங்கள் திருப்பி செலுத்திவிட்டோம். அடமன பைசல் ரசீது எழுதி பதிவு செய்வதற்கு முன்னதாக சேதுராம அய்யர் இறந்துபோய்விட்டார் அதனால் அதுபதிவு செய்யமுடியாமல் போனது. எனது மாமியார் வெள்ளச்சியம்மாள் என்பவர் தாவாசொத்தை சகாதேவன் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றும், அதனடிப்படையில் சகாதேவன் என்பவர் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததா என்றும், அதனடிப்படையில் அதை அவர் அனுபவித்து அவர் பெயரில் பட்டா மாற்றம் பெற்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. வெள்ளச்சியம்மாள் என்பவர் சகாதேவன் என்பவருக்கு கிரையம் ஏதும் செய்துகொடுக்கவில்லை. அவர் தன்னிச்சையாக தாவாசொத்தை அவர் விற்பனை செய்யமுடியாது. வெள்ளச்சியம்மாளுக்கு தாவா சொத்து அவர் தாய்வழியில் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அது அவர் தனிப்பட்ட சொத்தாக இருந்துவந்தது என்றும், அதனடிப்படையில் தான் அதை அவர் சகாதேவனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் மீது எனக்கோ, வெள்ளச்சியம்மாளுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்றும,அதன் அனுபவத்தில் நாங்க்ள ஒருபோதும் இருந்ததில்லை என்றும், ஏற்கனவே கிரையம் செய்துகொடுக்கப்பட்ட சொத்தில் இருந்து தவறாக உரிமை பாராட்டி தவறான ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் மீது நான் உரிமைகோருகிறேன் என்றும், அதனடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. தாவாசொத்தின் மீது தவறாக ஊாமைகோரி பிரதிவாதியிடம் நாங்கள் பிரச்சனை செய்ததால்தான் அவர் எங்களுக்கு எதிராக அ.வ.எண். 148/2013ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அவர் எங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததால் தவறான சங்கதிகளை குறிப்பிட்டு பிரதிவாதியை துண்புறுத்தும் எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வெள்ளச்சியம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்லமுடியாது. வெள்ளச்சியம்மாள் என்பவர் உடல்நிலை மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டு இருந்துவருவதை சாதகமாககொண்டு தவறான ஆவணம் ஏற்படுத்தி நான் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** -இல்லை